போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., மூலம் 28 தனி நடைகளும், [illegible] போக்குவரத்துக் கழகங்கள்மூலம் 25 தனி நடைகளும், தனியார் துறை பேருந்துகள்மூலம் 142 தனி நடைகளும் இயக்கப்படுகின்றன. பெருந்துறை வழியாக திருப்பூருக்கு போதிய பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளதால் புதிதாக இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

233—

விரைவுப் பேருந்து வசதி

வினா எண் 2106—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவையிலிருந்து சிதம்பரத்திற்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், மூலமாக தடம் எண் 722-ல் ஊட்டியிலிருந்து-புதுச்சேரிக்கு கோயம்புத்தூர், சிதம்பரம் வழியாக தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்து வசதியை கோயம்புத்தூரிலிருந்து சிதம்பரம் செல்லும் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், கோயம்புத்தூரிலிருந்து சிதம்பரத்திற்கு செல்லும் நேரடி பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்படி தடத்தில் நேரடிப் பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோவையிலிருந்தும் சிதம்பரத்திற்கு 2 பேருந்துகள் தினசரி 2 நடைகள் இயக்கி வருகிறது.

234—

பேருந்து வசதி

வினா எண் 2561—திருமதி எஸ். கவிதா சம்பத்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்திலிருந்து வெங்குப்பி வழியாக கள்ளபிரான்புரம் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போதிய சாலை வசதி இல்லாததால் தற்போது மேற்படி புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

235—

பேருந்து வசதி

வினா எண் 2563—திருமதி எஸ். கனிதா சம்பத்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இக்கானும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்திலிருந்து அருங்குணம், எண்டத்தூர் மற்றும் மருவலம் வழியாக செய்யூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மதுராந்தகம், அருங்குணம் கூட்டுச் சாலை, எண்டத்தூர், மருவலம் வழியாக செய்யூர் வரை 2 நகரப் பேருந்துகள்மூலம் 8 நடைகளும், 1 புறநகரப் பேருந்தின்மூலம் சென்னைக்கு 4 நடைகளும் தினசரி இயக்கப்படுகிறது. அந்த இயக்கங்கள் இந்த தடத்தின் பேருந்து தேவைக்கு போதுமானவையாகும்.

2012 மே 16]

236—

பேருந்து வசதி

வினா எண் 2566—திருமதி எஸ். கனிதா சம்பத்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, பெரும்பேர்கண்டிகை முதல் தாம்பரம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரும்பேர்கண்டிகை கிராமம், நன்கு போக்குவரத்து வசதி பெற்றுள்ள தொழுப்பேட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. தொழுப்பேடு வந்தடைந்தால் அனைத்து ஊர்களுக்கும் பேருந்து வசதியை பெறலாம். எனவே, பெரும்பேர்கண்டிகையிலிருந்து பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

237—

பேருந்து வசதி

வினா எண் 2567—திருமதி எஸ். கனிதா சம்பத்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரத்திலிருந்து தொழுப்பேடு, அம்மணம்பாக்கம் வழியாக வந்தவாசி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தாம்பரம், தொழுப்பேடு, அம்மணம்பாக்கம் வழியாக வந்தவாசி வரை பகுதி பகுதியாக போதிய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் / தனியார் பேருந்துகள் போதிய அளவிற்கு இயக்கப்படுகின்றன.